தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
**Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723**
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value: 86.87
**Volume - 1, Issue - 10, July - 2025**

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

# The Era of Thiruvaathavooradigal

**G. Vadivelu[1], Dr. T. Kannan[2],**

[1.] Ph.D. Scholar Reg. No: 06379, Department of Rare Manuscripts, Faculty of Manuscriptology,
Tamil University, Thanjavur.

[2.] Research Guide, Department of Rare Manuscripts, Faculty of Manuscriptology,
Tamil University, Thanjavur.

***Abstract:*** *The period of Tiruvathavoorar continues to be a significant Saivite enigma even today. Eminent scholars have researched his life and history during various periods and published the results of their studies. It is natural for the understanding of time and history to change based on the evidence available from time to time. A conclusion drawn by a researcher based on the historical facts they uncover from literary and epigraphic sources may be altered many years later by new evidence found during another researcher's study. Accepting the truths discovered through such new research forms the foundation for further developing, expanding, and clarifying historical studies. Chronological research is essential for comparing and analyzing the life and works of a scholar. Our predecessors have shown great diligence regarding this matter. Operating on the belief that 'all that appeared long ago is pure', and based on the data collected and compiled over many years by Maraiamalai Adigal, K.G. Sesaiyar, Acharya, and others, as well as on information obtained from Kadavun Maamunivar's Tiruvathavoorar Puranam and Nambiyar's Tiruvilaiyadal Puranam, the objective of this study is to pinpoint the period in which Tiruvathavoorar lived.*

***Key Words:*** *Thiruvaathavooradigal, Era of Thiruvaathavooradigal*

# திருவாதவூரடிகள் காலம்

**க.வடிவேலு[1], முனைவர் த. கண்ணன்[2],**

[1.] முனைவர்ப் பட்ட ஆய்வாளர்,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை, சுவடிப்புலம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

[2.] நெறியாளர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை, சுவடிப்புலம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**சுருக்கம்:** திருவாதவூரரின் காலம் இன்றளவும் மிகப்பெரிய சைவப் புதிராகவே நீள்கிறது. இவர் வாழ்ந்த காலம், வரலாறு குறித்த ஆராய்ச்சியினைப் பல்வேறு காலகட்டங்களில் அறிவிற் சிறந்த ஆன்றோர்கள் ஆய்ந்தறிந்து தமது ஆய்வின் முடிவினை வெளியிட்டுள்ளனர். காலமும் வரலாறும் அவ்வப்போது கிடைக்கும் ஆதாரங்கள் மூலம் மாற்றமடைவது இயல்பே. ஆய்வாளர் தான் கண்டறிந்த இலக்கிய மற்றும் கல்வெட்டுகள் சார்ந்த வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் எடுக்கும் முடிவானது அவருக்குப் பிறகு பல ஆண்டுகள் கழித்து மற்றொரு ஆய்வாளரின் ஆய்வின்போது கிடைக்கும் புதிய ஆதாரங்களின் மூலம் மாற்றமடையும். அத்தகைய புதிய ஆய்வுகளின் மூலம் கண்டறியப்படும் உண்மைகளை ஏற்றுக்கொள்வதுதான் வரலாறு சார்ந்த ஆய்வினை மென்மேலும் வளர்க்கவும், பெருக்கவும், தெளிவினையூட்டவும் அடித்தளமாக அமையும்.

ஓராசிரியரது வாழ்வையும் நூலையும் ஒப்பிட்டு ஆராய்வதற்கு கால ஆராய்ச்சி இன்றியமையாததாகும். இந்த விடயத்தில் நமது முன்னோர்கள் வெகு சிரத்தைக் கொண்டுள்ளனர். ‘தொன்று தோன்றிய யாவையும் தூயன’ என்ற நம்பிக்கையில் மறைமலையடிகள், கே.ஜி.சேஷையர், ஆச்சாரியா முதலானோர் பல ஆண்டுகள் சேகரித்து

*திரட்டிய தரவுகளின் அடிப்படையிலும், கடவுண் மாமுனிவரின் திருவாதவூரர் புராணம் மற்றும் நம்பியாரின் திருவிளையாடற் புராணத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலும் திருவாதவூரடிகள் வாழ்ந்த காலத்தினைச் சுட்டுவது இவ்வாய்வின் நோக்கமாகும்.*

***முக்கிய சொற்கள்:*** *திருவாதவூரடிகள், கால ஆராய்ச்சி*

**திருவாதவூரடிகளின் கால நிர்ணயம்**

ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திருவாதவூரடிகளின் கால நிர்ணயம் குறித்த பல ஆய்வுகள் இன்றளவும் வெளிவந்துள்ளன. அத்தகைய கால நிர்ணயம் குறித்த ஆய்வுகளை ஏற்பாரும் உளர். ஒருசிலர் மறுப்பாரும் உளர். அவ்வாறு வெளிவந்த குறிப்பிடத்தக்க ஆய்வாளர்களின் கால நிர்ணய ஆய்வினை இத்தலைப்பின் கீழ் காணலாம். ஸ்ரீமான் எஸ்.ஏ.திருமலைக்கொழுந்துப் பிள்ளையவர்கள் திருவாதவூரடிகளின் காலத்தினை கி.பி. முதல் நூற்றாண்டு என்றும், ஸ்ரீமான் பொன்னம்பலம் பிள்ளையவர்கள் கி.பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டு என்றும், சுவாமி வேதாசலம் அவர்கள் மூன்றாம் நூற்றாண்டு என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், வில்சன் என்பவர் அடிகள் அவர்கள் வாழ்ந்த காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு என்று அறுதியிட்டுக் கூறுகிறார். போப்பையர் அவர்கள் மேற்கூறியவர்களின் கூற்றினை மறுத்து கி.பி. 7, 8 அல்லது 9 ஆம் நூற்றண்டில் தான் அடிகள் வாழ்ந்தார் என்று தனது வாதத்தினை முன் வைத்துள்ளார். சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த இனிஷ் என்பவர் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் அடிகள் வாழ்ந்ததற்கான சான்றினைத் தந்துள்ளார். ஸ்ரீமான் கோபிநாத ராயரவர்கள் கி.பி.10 ஆம் நூற்றாண்டின் முடிவு அல்லது கி.பி.11 ஆம் நூற்றாண்டின் ஆதி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய ஆய்வாலர்களினின்றும் சற்றே விலகி டாக்டர் ரோஸ்ட் அவர்கள், அடிகள் வாழ்ந்த காலம் கி.பி.13 ஆம் நூற்றாண்டு அல்லது கி.பி.14 ஆம் நூற்றாண்டில் தான் இருக்க வேண்டும் என்று தனது ஆய்வில் குறிப்பிட்டு எடுத்துரைத்துள்ளார். இத்தகைய ஆய்வாளர்கள் ஆராய்ச்சி செய்த இப்பெரும் விடயத்தில் எந்தன் சிற்றறிவிற்கு ஏற்பத் தரவுகளை முன்வைத்து திருவாதவூரடிகள் கி.பி. நான்காம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவரல்லர் என்றும், கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் கூறத் துணிந்துள்ளேன்.

**மூவர் முதலிகளுக்கும் முன்னவர்**

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் தாங்கள் பாடிய தேவாரத்தில் திருவாதவூரடிகளின் பெயரினை 'வெளிப்படையாக' குறிப்பிடாத ஒரே காரணத்தினால், இவரை தேவாரம் பாடிய மூவருக்கும் பின்னவர் என்று குறிப்பிடுவது வாய்மைக்கு முரணான உரையேயாகும். சுருக்கமாகக் கூறினால் தேவார மூவரையும் வாதவூரடிகள் வாசகத்திலோ, கோவையிலோ குறிப்பிடவில்லை. வாதவூரடிகளை மூவரும் தேவாரத்தில் குறிப்பிடவில்லை. ஆனால், சில வரலாற்றுக் குறிப்புகள் ஆராய்ச்சியாளர்களை அடிகள் வாழ்ந்த காலம் குறித்த முடிவுக்கு வரத் தூண்டியுள்ளது. 'பாவை பாடிய

வாயால் கோவையும் அருளுக' என்பதற்கு இணங்க திருக்கோவையை அடிகள் பாடினார் என்பது அறிஞர் உலகம் அறிந்ததே. அந்நூலில் சைவ சமயத்தில் தீராத பற்றுள்ள வரகுணப் பாண்டியனைப் பற்றிய ஒரு குறிப்பும் உள்ளது. அதனை மட்டுமே கருத்திற்கொண்டு வாதவூரடிகள் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென்று முடிவுரைப்பது ஆய்வின் பிழையென்றே சுட்டுகின்றேன்.

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டர் தொகையினுள்ளே திருவாதவூரர் பெயர் சுட்டப்படவில்லை. அடிகள் பாடிய திருப்பதிகளாகிய திருப்பெருந்துறையையும், திருஉத்தரகோசமங்கையையும் பற்றி மூவரில் ஒருவரும் பதிவிடவில்லை. திருவாலவாயின்கண் சிவபெருமான் செய்தருளிய திருவிளையாடல் பலவும் திருவாதவூரர் அறிந்திருக்க அவைகளில் ஒன்றையேனும் தேவாரப் பதிகங்களில் கூறவில்லை. இருப்பினும் அவ்விரண்டு பதிகளும் அப்பர் காலத்திலேயே புகழ்பெற்ற சைவத் 'திருப்பதிகளாய்' கருதப்பட்டனவென்று நிச்சயமாகக் கூறலாம். இத்தலங்கள் இரண்டும் பதிகம் பெற்ற சைவத் திருத்தலங்கள் என்பது மெய்யே. ஆனால், அப்பர் தனது திருத்தாண்டகத்தில் பெருந்துறையைப் பெயர் கூறிப் போற்றியுள்ளார். மேலும், இச்சைவத் தலத்திற்கு ஆதிகைலாசம் என்ற திருப்பெயரும் உண்டென்பதை உ.வே.சாமிநாத ஐயர் திருப்பெருந்துறைப் புராணத்திற்கு எழுதுய முகவுரையில் காணமுடிகின்றது.

திருப்பெருந்துறையை ஆதிக்கயிலாயமென்று கூறியதால், அவர் காலத்தில் இத்தலம் சைவத் திருத்தலங்களுள் மிகவும் பழமை வாய்ந்தது என்பதை ஐயமறக் கூறலாம். இவையன்றியும் ஞானசம்பந்தர் பதிகம் பாடிய சிவஸ்தலங்களில் திருப்பேணு பெருந்துறையொன்று "பேணு" என்ற அடைமொழிக் கூட்டி இவ்வூருக்குப் பெயர் கூறியது. பேணு பெருந்துறை என்ற பதம் திருவாசகத்தேயுள்ளது. "பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்" என்ற திருவாதவூரர் வாக்கியத்தோடு "பெண்ணாயவார் சடையண்ணல் பேணு பெருந்துறையாரே" என்ற சம்பந்தர் வாக்கு இங்கு ஒத்துப்போகிறது.

திருவாதவூரடிகள் காலம் உறுதி செய்தற்பொருட்டு அப்பர், ஞானசம்பந்தப் பெருமான், முதலியோர் காலம் கி.பி.ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். அது கொண்டு அடிகளது காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முந்தையது என்பதனை கீழுவுள்ள தரவுகள் உறுதிபடுத்துகின்றன. அப்பர் சுவாமிகள் அருளிச்செய்த "பாடிளம் பூதத்தினானும்" என்னுந் திருவாரூர்ப் பதிகத்தில்

**"நரியைக் குதிரை செய்வானும்**
**நரகரைத் தேவு செய்வானும்**
**விரதங்கொண் டாட வல்லானும்**
**விச்சின்றி நாறு செய்வானும்"**

என்னும் மேற்கண்ட செய்யுளில் திருவாதவூரடிகள் பொருட்டு இறைவன் நரியைக் குதிரையாக்கிய திருவிளையாடல் குறிப்பிடத்தக்கது. தம்பொருட்டே பெருமான் நரிகளையெல்லாம் குதிரைகளாகத் திரித்துக்கொண்டு வந்தார் என்பதனை அடிகள் அவர்கள் ஆனந்த மாலையில்

"நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞாலமெல்லாம் நிகழ்வித்து"

எனவும்,

"அரியொடு பரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரையாக்கிய நன்மையும்"

எனவும் தாமே தம் அருட்திருவாயில் மொழிந்திடுதலின், இறைவன் செய்தருளிய அத்திருவிளையாடல் வாதவூரடிகள் பொருட்டே என்பதை யாவரும் அறிந்ததே. 'கல்லாடம்' முதலான தொன்னூல்களும் அத்திருவிளையாடல் வாதவூரடிகள் பொருட்டே நிகழ்த்தப்பட்டதெனத் துணிவு தோன்றக் காட்டுகின்றன. ஏனெனில், சிவபெருமான் திருவருள் பெற்றோரில் தலைச்சிறந்து நிற்கும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலான மூவரைப் பற்றியும் எங்கும் குறிப்பிடாமையால், கல்லாடம் எனும் நூல் அம்மூவருக்கும் முன்பாகவே தோன்றியுள்ளது. இதன்மூலம் வாதவூரடிகள் மூவர் முதலிகளுக்கு முன்னவர் என்பது எவ்வித ஐயத்திற்கும் இடமின்றித் தெளிவாகிறது.

**வரகுணன் குறிப்பாய்வு**

திருக்கோவையில் குறிப்பிடும் சைவ சமயப் பற்றுடைய வரகுணனுடன் அடிகளைத் தொடர்புப்படுத்துவது நியாயமானதாகவே தோன்றும். ஆனால், இவரைத் தவிர வேறு வரகுணன்கள் இருந்திருக்கலாம் என்பதையும் நினைவிற்கொள்ளவேண்டும். ஏனெனில் 'வரகுண' என்பது ஒரு அடைமொழி. அதனை யாரும் வைத்துக்கொள்ளலாம். குலோத்துங்க சோழன், ராஜராஜ சோழன் முதலான பெயர்கள் மன்னர்கள் பலருக்கு இருந்தது போல வரகுண பாண்டியன் எனும் பெயரும் மன்னர்கள் பலருக்கு இருந்திருக்க வேண்டும். வரகுண பாண்டியனுக்கு மூன்று நூற்றாண்டுக்கு முற்பட்டிருந்த அப்பர் சுவாமிகளுக்கும் முற்பட்டவராக இருத்தலால் ஆய்வாளர்களால் குறிக்கப்பட்ட வரகுண பாண்டியன் வேறென்பதைத் தெளிவோம்.

தமிழகத்தை ஆட்சி செய்த பல்லவப் பேரரசர்கள் காலத்திலும் பிறகு எழுந்த சோழப் பேரரசுக் காலத்திலும் முற்காலப் பாண்டியர்கள் ஆட்சி செய்தனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாற்றை வடவெல்லையாகக் கொண்டு தென்குமரி வரையுள்ள தென் தமிழகத்தை, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். இதில் பராந்தக நெருஞ்சடையன் எனும் முதல் வரகுணன் காலம் கி.பி.768 முதல் கி.பி.815 வரை நீடித்தது. பின்னர் முதலாம் வரகுணனைத் தொடர்ந்து ஸ்ரீ வல்லபன் என்பவன் கி.பி.815 முதல் கி.பி.862 வரை ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து

நல்லாட்சிப் புரிந்தான். இவனைத் தொடர்ந்து, சடையவர்மன் இரண்டாம் வரகுணன் கி.பி.862 முதல் கி.பி.907 வரை அரசாண்டவன். சிறந்த சிவபக்தன். முதலாம் வரகுண பாண்டியனோ வைணவ சமயத்தைப் பின்பற்றியவன்.

திருவாதவூரடிகள் குறித்த எவ்வித செய்திகளையும் வெளிப்படையாக இரண்டாம் வரகுணனின் கல்வெட்டுகளான திருநெய்த்தானம், திருக்கோடிக்கா, திருக்காட்டுப்பள்ளி, கும்பகோணம், ஆடுதுறை, திருவியலூர் ஆகியவற்றுள் ஒன்றிலும் குறிப்பிடவில்லை என்பது திண்ணமே. அதேபோல் இரண்டாம் வரகுணனின் தம்பியாகிய அவனி நாராயணன் என்பவன் தந்த தளவாய்புரச் செப்பேட்டில் இரண்டாம் வரகுணனைப் பற்றிப் பின்வருமாறு பேசப்பெற்றுள்ளது. ‘பிள்ளைப் பிறை சடைக்கணிந்த பினாகபாணி உளத்திருத்தி உலகம் காக்கின்ற நாளில்’ என்று அச்செப்பேடு தொடங்குகிறது. எனவே வரகுணனின் தனிச்சிறப்பாகப் பேசப்பெற்றது அவனுடைய சிவ பக்தியையே ஆகும். வரகுணன் என்ற ஒரு நாமத்தை மட்டும் கருத்திற்கொண்டு, திருவாதவூரடிகள் சுட்டும் வரகுணன் இரண்டாம் வரகுணன் என்றுரைப்பது ஆய்வின் தெளிவான முடிபாகாது.

**பொய்யடிமை இல்லாத புலவர்**

பொய்யடிமை இல்லாத புலவர் என்பது திருவாதவூரடிகளையே குறிப்பதாகும். இதுவரை ஆராய்ந்த அறிஞர்கள் யாரும் அறுதியிட்டு அவருடைய இயற்பெயரைக் கூறாமல் திருவாதவூரர் என்ற அவர் பிறந்த ஊரின் பெயராலும், கடவுள் கொடுத்த மாணிக்கவாசகர் என்ற பெயராலும் அழைத்து வருகின்றனர். இன்னவரையில் இதற்கான சான்று எங்கும் கிடைத்தில.

அறுபத்துமூன்று நாயன்மானர்களைப் பாடிய சேக்கிழார் பெருமான் ஏன் அடிகளைப் பாடாமல் விட்டுவிட்டார் என்றால், சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டர் தொகையில் அடிகள் பெயர் இல்லாததால் சேக்கிழார் பாடவில்லை. சேக்கிழார் பெருமானுக்கு திருத்தொண்டர் தொகையே ஆதார நூலாகும். இத்திருத்தொண்டர் தொகையில் சுந்தரர் ‘பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்’ என்று பாடியுள்ளார். தேவார மூவரில் அப்பரும், சுந்தரரும் திருவாதவூரடிகளைத் தன் பாடல்களில் குறிப்பிடுவதன் வாயிலாக அடிகள் தேவாரம் பாடிய மூவருக்கும் முன்னவர் என்பது தெளிவே.

டாக்டர் நாகசாமியின் பொய்யடிமை இல்லாத புலவர் என்ற கட்டுரையில் கீழ்கண்ட தகவலினைப் பதிவிட்டுள்ளார்.

அடியார்கள் புராணத்தை வடமொழியில் தரும் உபமன்யு பக்த விலாசம் இரண்டு விதமாக பொய்யடிமை இல்லாத புலவரை மொழிப்பெயர்த்துள்ளது. அதனைக் கூர்ந்து நோக்கினால் புலவர் என்னும் சொல் ஒருவரையே குறிக்கிறது என்பது தெளிவாகிறது. அந்தக் கவி சிவபெருமானைத் தவிர வேறு எவரையும் பாடவில்லை. அறுபத்து மூவர் வரலாற்றைக் கூறும் அகஸ்திய பக்த விலாசம் என்ற சமஸ்கிருத நூலும் பொய்யடிமை இலாத புலவரை ‘ஒருவர்’ என்றே கூறுகிறது.

வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்களின் திருத்தொண்டர் தொகையில் உள்ள கூற்றுப்படி திருப்பாடல்கள் மொத்தம் பதினொன்று, அவற்றுள் தனியடியார்களைப் பற்றிய குறிப்புகளை உணர்த்தும் திருப்பாடல்கள் முதல் ஒன்பது பாடல்களும், ஈற்றுப் பாடலாக அமைந்த பதினோராவது பாடலும் ஆகப் பத்துப் பாடல்கள். இடையில் உள்ள பத்தாவது திருப்பாடல் தொகையடியார்களைப் பற்றியே குறிப்பிடும் பாடலாகும்.

பொய்யடிமை இல்லாத புலவர் தொகையடியார் என்பது கருத்தாயின், சுந்தரர் ஒன்பதாவது செய்யுளின் இறுதியிலும், பதினோராவது செய்யுளின் தொடக்கத்திலும் குறிப்பிட்டுப் பாடித் தொகையடியார்களுக்கென பாடியமைந்த பத்தாவது செய்யுளுடன் இயைபு காட்டிச் சென்றிருப்பார். இங்ஙனம் செய்யாமல் தனியடியார்களைப் பற்றியே குறிப்பிட்டுப் பாடிவருகின்ற போக்கில் பொய்யடிமை இல்லாத புலவர் எனும் தொடரில் குறிப்பிட்ட புலவர் தனியடியாரே ஆவர் என்று குறிப்பிட்டுள்ளார். சுந்தரர் சுட்டும் அத்தனியடியார் திருவாதவூரடிகள் என்பது மெய்மையே.

**தொக்குப்புரை**

திருவாசகத்தில் மிகப் பழமையான அடியவர்களான கண்ணப்ப நாயனாரைப் பற்றிய குறிப்பும், சண்டேசுவர நாயனாரைப் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றன. ஏனைய நாயன்மார்களைப் பற்றிய குறிப்பு ஏதும் காணப்படவில்லை. திருவாதவூரடிகள் பிற்பட்டவராயின் தேவார மூவரையோ நாயன்மார்களில் சிலரையேனும் குறிப்பிட்டிருப்பார். ஆகவே, இவர் தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டவரே ஆவார்.

சீரிய கிறித்துவப் பாதிரியார் தம் மதக் குருக்களுக்கு எழுதிய 'கோட்டயக் கோவில்' கடிதம் கி.பி.மூன்றாம் நூற்றாண்டினது. அக்கடிதத்தில் மணிமொழியார் பல கிறித்துவர்களை மதமாற்றிச் சைவ சமயத்தவர்களாகச் செய்தமை குறிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வினை க.சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள், தான் எழுதிய மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் என்னும் நூலில் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் தங்களது பாடல்களின் வழியே திருவாதவூரடிகளைக் குறிப்பிடுவதால் அடிகள் மூவர் முதலிகளுக்கு முன்னவர் என்பது ஆய்வின் வழியே தெளிவுருகின்றது. மேலும், உயர்திரு மறைமலையடிகள், கே.ஜி. சேஷையர், வித்துவான் கண்ணப்ப முதலியார் ஆகியோரது ஆய்வுத் தரவுகளின் அடிப்படையிலும், இன்னபிற நூல்களிலிருந்து பெறப்பட்ட செய்திகளின் அடிப்படையிலும் மணிமொழியார் திருவாதவூரடிகள் காலவரம்பு கி.பி.மூன்றாம் நூற்றாண்டு என்பது இவ்வாய்வுக் கட்டுரையின் வாயிலாக மெய்ப்பிக்கப்படுகிறது.

## *பார்வை நூல்கள்*


1. Achariyar, P. S. (1929). *மணிவாசகர் சரித்திரம்*. இ.மா.கோபாலக்ருஷ்ணக் கோன்.
2. Kadavun Mamunivar. (1895). *திருவாதவூரர் புராணம்*. வாணீ விலாஸ் அச்சுக்கூடம்.
3. Palur Kannappa Mudaliyar. (1958). *பொய்யடிமை இல்லாத புலவர்– யார்?*. சென்னைப் புதுக்கல்லூரித் தமிழ்த்துறை.
4. Maraimalai Adigal. (2003). *மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்*. பூம்புகார் பதிப்பகம்.
5. Maraimalai Adigal. (2017). *மாணிக்கவாசகர் பாகம் (1 & 2)*. வைத்தியநாதன் பதிப்பகம்.
6. Pope, G. U. (1900). *The Thiruvachagam*. Oxford at the Clarendon Press.
7. Seshaiyar, K. G. (1915). *மாணிக்கவாசகர் காலவாரச்சி*. மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை.
8. Sivapriya. (2009). *மாணிக்கவாசகப் பெருமான்*. மணிவாசகர் பதிப்பகம்.
9. Vanmeeganathan, G. (1983). *இந்திய இலக்கியச் சிற்பிகள்: மாணிக்கவாசகர்*. சாகித்திய அகாதெமி.


## References


1. Sesha Iyer, K. G. (1915). *Māṇikkavācakar kālavārachi* [Manikkavasagar's Chronology]. Madurai Tamil Sangam Muttirasalai.
2. Vanmeeganathan, K. (1983). *Māṇikkavācakar* [Manikkavasagar]. Sahitya Akademi.
3. Maraimalai Adigal. (2003). *Māṇikkavācakar varalāṛuṅ kālamum* [Manikkavasagar's History and Period]. Poompuhar Pathippagam.
4. Sivapriya. (2009). *Māṇikkavācakap perumāṉ* [Lord Manikkavasagar]. Manivasagar Pathippagam.
5. Maraimalai Adigal. (2017). *Māṇikkavācakar: Pākam 1 & 2* [Manikkavasagar: Parts 1 & 2]. Vaidhyanathan Pathippagam.
6. Achariyar, P. S. (1929). *Maṇivācakar sarittiram* [History of Manikkavasagar]. E. Ma. Gopalakrishna Kon.
7. Pope, G. U. (1900). *The Thiruvachagam* (1st ed.). Clarendon Press.
8. Paloor Kannappa Mudaliar. (1958). *Poyyaṭimai illāta pulavar – Yār?* [The Poet Without Falsehoo—Who?]. Chennai New College Tamil Department.
9. Kaṭavuṇ Māmuṉivar. (1895). *Tiruvātavūrar purāṇam* [The Purana of Thiruvathavurar]. Vani Vilas Press.


**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**